1995 ஏப்ரல் 17]

318—

பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் மீனவர்களுக்கு இலவசக் குடியிருப்பு

*33531—செல்வி கோ. மல்லிகா:

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம். வேளாங்கிராயன்பேட்டை கிராமத்தில் வசிக்கும் மீனவர்களுக்கு இலவச குடியிருப்புகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், வேளங்கிராயன்பேட்டை கிராமத்தில் வசிக்கும் மீனவர்களுக்கு 77 இலவச குடியிருப்புகள் கட்டுவதற்காக அரசாணை (நிலை) எண். 181. கால்நடை பராமரிப்பு (ம) மீன் துறை, நாள் 4-8-1994-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், கட்டுமானப் பணி துவக்கப்படும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள். *
(பன்னிரெண்டாம் பட்டியல்)

1—

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுசேமிப்பு இலக்கு

வினா எண் 43824—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1993-94—ஆம் ஆண்டு சிறுசேமிப்பு இலக்கு எவ்வளவு?

(ஆ) இவ்வருவாய் மூலம் எடுக்கப்பட்ட திட்டங்கள் யாவை?

குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS